# ★ இனப் பிரச்னையைத் தீர்க்குமாறு சர்வதேச நிறுவனங்கள் கோரிக்கை

(கொழும்பு)
பொருளாதாரத்தைச் சீர் செய்யும் முயற்சியில் இறங்கு முன் வடக்கு–கிழக்கு பிரச்னையைத் தீர்த்து வைக்குமாறு

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 31 இதழ் 218
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16 — 09 — 1992

## அமைச்சர் ரணில் மீது சி.ஐ.டி. பொலிஸ் விசாரணை

(கொழும்பு)
அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மீது விசாரணை நடத்த விசேட சி. ஐ. டி. பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன் வனசிங்க வடபகுதி விஜயம்

(கொழும்பு)
கூட்டுப்படைத் தலைமை "க[illegible] களபதி ஹமில்டன் [illegible]ன சிங்கா வடபகுதியில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள

(4ம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாவில் நேற்று முதல் திலீபன் நினைவு நாள் ஆரம்பம்

## உணர்வுபூர்வமாக மக்கள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தமிழீழ தாயகத்தின் விடுதலைக்காக உலக அரங்கில் குரல் கொடுத்து உண்ணாவிரதம் அனுஷ்டித்து உயிர் துறந்த த்யாகி திலீபனின் ஐந்தாவது ஆண்டு நிறைவின் ஆரம்ப நாள் நினைவு நிகழ்ச்சிகள் நேற்று தமிழீழமெங்கணும் தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக காலை 8 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்குப் பகுதி வீதியில் நேற்று முதல் நாள் ஆரம்பமான நிகழ்ச்சிகள் கொடியேற்றல் வைபவத்துடன் ஆரம்பமாகியது.

தீவகக் கோட்ட அரசியற் பிரிவுக் காரியாலயத்திலிருந்து தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய அலங்கார ஊர்திகள் கோயில் வீதி வழியாக எடுத்து வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெருமளவு மக்கள் உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

யாழ். குடாவின் பல பாகங்களிலும் தியாகி திலீபனின் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் நேற்றுக்காலை மக்களால் ஆரம்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அதிரடியினால் கிழக்கில் ராணுவம் திணறல்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் புலிகள் நடத்தும் அதிரடி தாக்குதல்கள் இராணுவத்தை திணறடித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4–ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதிச் சிறையில் 459 தமிழ் கைதிகள்

(கொழும்பு)
திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 459இற்கு மேற்பட்டோர் களுத்துறை, மற்றும் பூஸா முகாமகளில் சொல்லொணாத் துன்பங்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு. அகதிகளுக்கு நிவாரணம் கிடைப்பதில்லை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் தமிழ் அகதிகளுக்கு என சர்வதேச தொண்டர் அமைப்புகள் வழங்கும் நிதி மற்றும் நிவாரண உதவிகள் எதுவும் இவ் அகதிகளை

(4ம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டைக் கண்டித்து கிளிநொச்சியில் மறியல்

(யாழ்ப்பாணம்)
நிவாரண வெட்டை கண்டித்து நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்துக்கு முன்பாக 10,000 க்கு மேற்பட்ட மக்கள் குழுமி அரசசெயலக ஊழியர்களை உள்ளே அனுமதிக்காது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இங்குள்ள அரச திணைக்களங்கள் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. பல திணைக்களக் காரியாலயங்கள் காலையில் திறக்கப்பட்ட போதும் மக்களின் ஆக்ரோசமான எதிர்ப்பைக்கண்டு அவர்களும் காரியாலயங்களைப் பூட்டிவிட்டு மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

ஆவேசப்பட்ட மக்கள் கட்டடங்களுக்கு சேதங்களை ஏற்படுத்த முயற்சித்தபோது

(4–ம் பக்கம் பார்க்க)

## திலீபன் வீடியோ ஒளிப்பதிவு நாடா

(யாழ்ப்பாணம்)
லெப் கேர்ணல் திலீபனின் உண்ணாவிரத நிகழ்வின் தொகுப்பாக 'திலீபன்' என்ற வீடியோ ஒளிபரப்பு நாடாவை நிதர்சனம் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

லெப். கேர்ணல் திலீபனின் 5–வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டியே இவ் ஒளிப்பதிவு நாடா வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. [ஈ]

## பருத்தித்துறைக் கடலில் மீனவர் மீது தாக்குதல்

(உடுப்பிட்டி)
பருத்தித்துறை கடற்பிராந்தியப்பகுதியில் நேற்றுக்காலை 7–30 மணியளவில் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் மனோதிடம் வியத்தகு மேல் நிலையில் இருக்கிறது

(கொழும்பு)
எத்தகைய இழப்புக்கள் ஏற்பட்டாலும் புலிகளின் மனோதிடம் வியத்தகு மேல நிலையிலிருக்கிறது என்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் போர்முனையிலுள்ள ராணுவ மேலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

களத்தில் புலிப் போராளிகள் பிரமிப்பூட்டும் அளவுக்கு மூர்க்கமாகவும் இலட்சியப் பற்றுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் இதனால் அவர்களின் எதிரிகள் கூட அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போர்முனையில் சளைக்காது ஆண் போராளிகளுக்குச் சமனாக நின்று போராடும் அளவுக்கு பெண்போராளிகள் தேர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

## முல்லைத்தீவில் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்
நிவாரண வெட்டைக் கண்டித்து இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊர்வலமும மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களால் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. (ரி)

## இனப் பிரச்னைக்கு சிறிமா தீர்வு கண்டிருப்பாராம்

(கொழும்பு)
தான் ஆட்சியிருந்தால் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு கண்டிருப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அண்மையில் பெளத்த பீடாதிகளுடன் நடத்திய சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தாராம்.

இச்சந்திப்பின் போது திருமதி சிறிமாவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் பற்றி பெளத்த பீடாதிகள் அவருக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ரி)

## சிறிலங்கா இராணுவத்தில் பிளவுபடும் நிலை ஏற்படும்

(கொழும்பு)
இராணுவ உயர்பீடத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால் படையினர் பலர் கசப்பும், விரக்தியும் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வளவு காலமும் கட்டுக்கோப்பு குலையாமலிருந்த இராணுவம் இம் மாற்றங்களால் பிளவுறும் நிலையை அடையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நடவடிக்கையினால் அதிருப்தியுற்ற துருப்புகள் பெருமளவில் பதவி விலகலாம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மழை நீரைச் சேமிப்போம்.
விளைபொருளைப் பெருக்குவோம்.

## வரி விளம்பரம்

**இலுப்பை விதை**

இலுப்பை விதை வாங்கப்படுகிறது. அண்ணாகோப்பி கடைகளிலும் ஏற்கப்படுகிறது மில்க்வைற, யாழ்ப்பாணம்.

(எ-2436)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் தாதிப்பதவிக்கு விண்ணப்பங்கள் 1992 ஐப்பசி 10ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பளம்: ரூபா 3105/- மாதமொன்றுக்கு (நிலையானது)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நியமனம் வழங்கப்படும்.

தகைமைகள்;

1. மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தி
2. இலங்கை மருத்துவப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டதாதித் தகுதிச் சான்றிதழ்.

இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களை பெறவிரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் இருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல்வேண்டும்

விண்ணப்ப முடிவுத் தேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-09-10.

(எ-2440)

---

**தான்சன் கல்வி நிலையம்**

## இடமாற்றம்

மலிலாகத்தில் இயங்கிவந்த தான்சன் கல்வி நிலையம் கே. கே. எஸ். வீதி மருதனுமடத்திற்கு (இராமநாதன் கல்லூரிக்கு அருகாமையில்) இடமாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் 19-09-1992 சனிக்கிழமை வழமையான வகுப்புக்கள் நடைபெறும்.

(சி 6811) நிர்வாகி.

---

**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

## ஆதனவரி அறிவித்தல்

1992-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30-09-92 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரப்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படுமெனவும், 4-ம் கந்தாயத்துக்கான வரியை அக்கந்தாயத்தின் முதல் மாதத்துக்குள் 5% வரிக் கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள்<br>குடியிருப்புக் காணிகள் | 15 % |
| இவையல்லாத காணிகளுக்கு | 20 % |


காசோலைகள், காசுக் கட்டளைகளை அஞ்சல் கட்டளைகளை "யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின் சார்பில், அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன் கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வாயிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரிமதிப்பு இலக்கம் வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவு செய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-09-1992. (ஏ 2439)

---

# மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன்**

**அருளானந்தம் சுதாகரன்**

(க. பொ. த. உயர்தரம் கணிதம்) ஹாட்லிக் கல்லூரி)

உதிப்பு: 08-09-1969 உதிர்வு: 21-08-1989

திதி: 16-09-1992

ஆண்டு மூன்று ஓடியதே அன்புச் சுதாவே!
பண்பின் பிறப்பிடமே! எவ்வுயிர்க்கும் இனியனே!
அன்றும்பால் இன்றும் எம்மிதயமதில்
மங்கா மணிவிளக்காய் மிளிர்பவனே!
உன் நினைவலைகள் மோதிவர நெஞ்சிழந்து
தவிப்பதன்றி வேறுளதோ எம்மவர்க்கு!
உன் புனித ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தங்கை,
உடன்பிறவா சகோதர சகோதரிகள்,
ஆசையம்மா.

திக்கம்,
அல்வாய் மேற்கு. (சி 6746)

---

**யாழ். மாவட்ட**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

## பதவி வெற்றிடம்

(1) பதவி

### பொதுமுகாமையாளர் - 101/4

மேற்படி பதவிக்கு ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

விண்ணப்ப முடிவுத் திகதி: 23-09-92

1. சம்பள அளவுத் திட்டம்:
   1755 - 2805
   75 x 6 - 100 x 6
2. வயதெல்லை:- 30 — 45 வரை.
3. பிணைப்பணம்: ரொக்கம் ரூபா 10,000/-
   ஆதனப் பிணை ரூபா 25,000/-
4. கல்வி மற்றும் தகைமைகள்:
   அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 5ம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 6ம சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
   அல்லது
   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இவ்வெட்டு வருடகால அனுபவத்தில 02 வருடங்களுக்கு குறையாமல் சிரேட்ட முகாமைமட்ட பதவி ஒன்றில் அனுபவம்
   அல்லது
   இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் [உயர்தரம்] சான்றிதழ்/ க. பொ. க. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப்பத்து வருடகால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேஷ்ட முகாமைமட்டப் பதவியில் 02 வருடகால அனுபவம்

குறிப்பு:

1. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து அனுப்பப்படல் வேண்டும்.
2. கல்விச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ் பிரதிகளும் வசிப்பிடத்தகைமை பிறப்புச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும், விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
3. கால்நடைவளர்ப்பு, கால்நடையுணவு தயாரித்தல் போன்றவற்றல் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கடித மேலுறையின் இடது பக்கமேல் மூலையில் "பொது முகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### (2) சிரேஷ்ட லிகிதர்

வயது:- 25 — 45 வருடங்கள் வரை.

சம்பளத் திட்டம்:- (302. 1))
350/- — 615/-
........................ (படிகள் தவிர)
15 x 7 — 20 x 8

**தகைமைகள்:**

கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியாளர் / எழுதுவினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 12ம் சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஐக்கிய இராச்சிய கணக்குப்பதவியாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் / க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது.

அரசாங்கம், கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதனியார் துறையில் 15 வருடங்களுக்குக்குறையாமல் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர்கள் நல்ல திடகாத்திரமான, தேக ஆரோக்கிய நிலையில் உள்ளவர்களும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஆங்கிலம், தமிழில் கடிதத்தொடர்புகள் அறிக்கைகள் முதலியவற்றை சுயமாகத்தயாரித்து தட்டச்சு செய்யக்கூடியவராகவும், காரியாலயத்தைத் திறம்பட நிர்வகிக்கக் கூடிய வல்லமையும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பிறப்பு, கல்வி, அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோ பிரதியுடன் 23-09-92ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய்.

(எ.2441)

# ★ இராணுவ பாதுகாப்பில் 50,000 சிங்கள குடும்பங்கள்

# மணலாறில் குடியேற்றம்

(மணலாறு)

மணலாறு பகுதியில் இது வரை ஐம்பதாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம்செய்த பத்திரிகையாளா ஒருவர் இதனை தெரிவித்துள்ளார். மேற்படி குடும்பங்களின் பாதுகாப்பிற்கென இப்பகுதியை சுற்றி இராணுவத்தினரின் பல காவலரண்களும் முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

1984ம் ஆண்டில் இப்பகுதியிலிருந்து சுமார் 20,000 தமிழ் குடும்பங்கள் இராணுவத்தால் துரத்தியடிக்கப்பட்டபின் இது காலவரை இங்கு சுமார் ஐம்பதாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு கிடைக்கும் சர்வதேச நிதி உதவிகளை பயன்படுத்தியே இக்குடியேற்றத்திட்டம் நன்கு பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இக்குடியேற்றத் திட்டத்திற்கு சுமார் 340 கோடிரூபா செலவிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## பாடசாலைகளில் பிரார்த்தனை

(உடுவில்)

தியாகி திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி சகல பாடசாலைகளிலும் இம்மாதம் 26ம் திகதி வரை காலைநேர பிரார்த்தனைகள், கூட்டங்கள் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (109)

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தைக் குளவத்தை சாத்தியர்மடம் அருள்தரு ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் நாளை 17ம் திகதி வியாழக்கிழமை ஏகதின இலட்சார்ச்சனையும் ஹோமமும நடைபெறும். (அ)

## நாளை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் விளையாட்டு விருதுகள் வழங்கும் வைபவம் நாளை வியாழன் மாலை 5 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா கலந்து கொண்டு மாணவர்களுக்கு விருதுகளை வழங்குவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

அண்மையில் அகில இலங்கைரீதியில் பல்கலைக்கழக மாணவரிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் சாம்பியனாகியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## பாடசாலைகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அம்பனைக் கொத்தணியைச் சேர்ந்த யா/அளவெட்டிசினன் கலட்டி ஞானோதய வித்தியாலயம் யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் யா/மாவிட்டபுரம் தெற்கு அ. மி. த. க. பாடசாலை இளவாலைக் கொத்தணியைச்சேர்ந்த யா/சிறுவிளான் கனகசபை வித்தியாசாலை என்பன கடந்த7ம் திகதிதொடக்கம் உடுவில் மான் கல்லூரியில் மாலை 1-15 மணி தொடக்கம் 5-15 வரை நடைபெறுகின்றன.

## தியாகி திலீபன் நினைவாக இடம்பெறும் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 5ம் ஆண்டு நினைவு நாளையொட்டி கோட்டமட்டத்திலும்வட்ட மட்டத்திலும் சிரமதானங்கள் நடைபெறும்.

இன்று 16ம்திகதி வடமராட்சி பருத்தித்துறைபொலிகண்டி மேற்குப்பகுதி மக்கள் பொதுக் கிணறுகளையும், கோப்பாயில் இருபாலைப் பயிற்சிமுகாம் வீதியும், கோப்பாய் வைத்தியசாலையும் துப்பரவு செய்வார்கள்.

நாளை 17ம் திகதி அல்வாய் வடக்குப் பகுதி மக்கள், பாபு வீதியையும், தென்மராட்சியில் தெ. ப. பொ. கூ சங்க ஊழியர் அரசினர் வைத்திய சாலையையும், தீவகக்கோட்ட மக்கள் லவனிதா குடியிருப்பையும் துப்பரவு செய்வார்கள்

18ம் திகதி தென்மராட்சியில் பொதுமக்கள் அரசன் நகர் வீதியையும், கரவெட்டியில் அல்வாய் மக்கள் மாவீ

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த சிறார்களிடையே தெரிவு செய்யப்பட்ட சிறந்த பண்பாடு, குணதிசயங்களைக் கொண்டு விளங்கும் மாணவருக்கும், சைவசமய அறிவில் தேர்ச்சியுற்ற மாணவர்க்கும் இன்று 16ம் தேதி மாலை 4-30மணிக்கு சைவவித்தியாவிருத்திச் சங்க நிர்வாக மண்டபத்தில் பரிசு வழங்கல் வைபவம் இடம் பெறும்.

பரிசில்களை நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தொழில் அதிபர் கலாநிதி க. கனகராஜாவும் வழங்குவர். (அ)

## திலீபனின் புகழ் பாடுவாய்! தமிழா!

பல்லவி

தீந்தமிழ்ச் சொல்லாலே தியாகத்தின் உருவான
திலீபனின் புகழ் பாடுவாய் தமிழா!
... (தீந்...)

அனுபல்லவி

ஊரெழுப் பதிவந்த உத்தமன் உயர்சீலன்!
உயர்கல்வி சுகவாழ்வை உதறிய தமிழ்வீரன்!!
... (தீந்...)

சரணம்

தமிழின நலமொன்றே தன்நலம் எனக்கொண்டான்!
தமிழரின் மண்மீட்பே தன்கடன் எனக்கொண்டான்!!
தமிழ்ப்பணி யொன்றேதன் பணியென
அவன்கொண்டான்!
தமிழீழ மொன்றேதன் உயிரென அவன்கொண்டான் !
...(தீந்...)

0

பகைவரைப் புறம்கொள்ளச் சமர்க்களம் பலகண்டான்!
பகைவரை பலிகொண்டே அமர்க்களம் பலவென்றான்!!
கயவரை இனம்காட்டக் காந்தியின் நெறியேற்றான்!
கயவரை இனம்காட்டித் தன்னுயிர்ப் பலிதந்தான !!
......(தீந்......)

0

ஈடொப்பும் இல்லாத தியாகத்தை அவன்செய்தான்!
ஈங்குள்ளோர் செய்யாத தியாகத்தை அவன்செய்தான்!
அண்ணல்காந்தி எண்ணாத் தியாகத்தை
அவன்செய்தான்!
மண்ணுள்ளோர் வியந்தேத்தும் தியாகத்தை
அவன்செய்தான்!!
...(தீந்......)

சரவணன்.

## இராசி பலன்

16-09-1992
புதன்கிழமை
(தமிழுக்கு ஆவணி 31)

சதுர்த்தி ந. ப 12-06 வரை பரணி பி இ 5-04 வரை இராகுகாலம் பகல் 12-03 முதல் 1-33 வரை சுபநேரம் மாலை 4-33 முதல் 6-03 வரை சித்தாமிர்தயோகம்.

மேடம்: தெய்வசிந்தனை, கல்விஞானம், தியாகம்.

இடபம்: ஜனவிரோதம், அமைதிக்குறைவு, பயம்.

மிதுனம்: அதிக பிரயாசம், காரியனுகூலம், பணவரவு.

கடகம்: தொழில் சிறப்பு, நோய்குறைவு, மனநிறைவு.

சிங்கம்; உத்தியோக வெறுப்பு, காரிய தடை, யோசனை.

கன்னி: அதிக பிரசங்கம், வாக்குபகை, கடுந்துன்பம்.

துலாம்: மேலோர் நட்பு, தொழில் லாபம் மகிழ்ச்சி.

விருச்சிகம்! பந்து சேர்க்கை சுபநிகழ்ச்சி, சகோதர உதவி,

தனுசு: களத்திரசோகம், குருநிந்தனை, விதண்டவாதம்

மகரம்: கடன்படல் குடும்ப மோதல், தப்பபிப்பிராயம்.

கும்பம்: விருந்துண்ணல், புத்திரர்பெருமை, புகழ்.

மீனம்: பெண்பகை, வைத்தியசெலவு, காரியகேடு.

— ஜோஸ்யர்


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ - து) சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் கிளை நிலையங்கள், நாட்டு நிலைமை காரணமாக அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசிப்பதனால், மூடப் பட்டுள்ளன. சங்கத்தின சகல கிளைகளின் வாக்காளர் பட்டியலும், 30-9-92உடன் மூடி, கிளைக்குழுத் தேர்தல் நடைபெறவுள்ளமையால், மூடப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களின் நிலைகளைப் பற்றி கிளைக்குழுவினரை அழைத்து, கலந்துரையாடி முடிவுகள் செய்யஇருப்பதனால் 19-9-92ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும். தயவு செய்து குறித்த கிளைக்குழு உறுப்பினர் சகலரும் தவறாது பங்குகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

கிளை இல. 20 — குப்பிழான்.
,, 21 — ஏழாலை வடக்கு.
,, 22 — ஏழாலை கிழக்கு.
,, 26 — திடற்புலம்.
,, 30 — புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், செயலாளர்.
சுன்னாகம்,
12-9-92

(எ-2442)



## உதைபந்தாட்டப் போட்டி

1987ம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களால் இறந்த கோண்டாவில் வடக்கைச்சேர்ந்த 53 பொதுமக்களின் ஞாபகார்த்தமாக கலைவாணி ச. ச நிலையமும், கலைவாணி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி.

இதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அணிகளை யாவையும் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்வரும் 20-9-92க்கு முன்னர் உங்களின் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கவும்

போட்டியில் வெற்றிபெறும் கழகங்களுக்கு

★ 1-ம் பரிசு 5000/- ரொக்கம்
★ 2-ம பரிசு 2000/- ,,
★ 3-ம் பரிசு 1000/- ,,

பணப் பரிசில்களுடன் விருதுகளும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முகவரி:

★ மதன்கடை
(டிப்போக்கு முன்பாக)
பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

★ Jaffna Technical Institute
(றெயில்வே கடவைக்கு அருகாமையில்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6813)



## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகர் சின்னத்துரை
(ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள எழுதுவினைஞர்)
அல்வாய் மேற்கு, அல்வாய்

மண்ணில்: 13-01-1926 விண்ணில்: 21-08-1989

திதி: 16-09-1992

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

அல்வாய் மேற்கு
அல்வாய்.

(சி 6814)

## யாழ். மாவட்ட

# புனர்நிர்மாண வேலைகளுக்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

1993-ம் ஆண்டு யாழ். மாவட்ட புனர் நிர்மாண வேலைகளுக்கு 5 கோடியே 70 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது

இவ்வருடம் புனர்வாழ்வு வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் 70 லட்சம் ரூபா, யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு அண்மையில் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டது.

இப்பணம் கல்வித்திணைக்களம், சுகாதாரதிணைக்களம், கால்நடைத் திணைக்களம், விவசாயத்திணைக்களம், யாழ். மாநகரசபை ஆகியவற்றின் புனர்நிர்மாண வேலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது

1993-ம் ஆண்டுக்கு புனர்நிர்மாண வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்துக்கான திட்டங்கள் பற்றி யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினால் அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## இன்று
## சேவை நலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ மு கனகசபாதிக் குருக்களின் சேவை நலம் பாராட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு மேற்படி ஆலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது

இவ்விழாவிற்கு பேராசிரியர் அ. துரைராஜா தலைமை வகிப்பார். இவ்விழாவில் சிவாசாரியரை கௌரவித்து பாராட்டு பத்திரமும் பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கப்படும். சிவாசாரியாரின் சேவையை பாராட்டி பல கல்விமான்கள் பாராட்டுரையும் வழங்குவர். (சி)

# கணித, விஞ்ஞான ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

(நல்லூர்)

கடந்த மே மாதம் நடைபெற்ற கணித. விஞ்ஞான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 24ம் திகதி நடைபெறுமென திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் எம். ஏ. சி. முகைதீன் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றத் தவறுவோர் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாது எனவும் இவர்களுக்கான பிரயாணப் படிகள் வழங்கப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையின் போது தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் க. பொ. த. உயர்தரபரீட்சைச் சான்றிதழ் விண்ணப்பித்த பிரிவுக்குள் 04 வருடம் வசித்ததை நிரூபிப்பதற்கான ஆவணம், கிராமசேவையாளர் நற்சான்றிதழ் கொண்டுவர வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (158)

## ஹமில்டன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிகளுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து படைத்தளபதிகளுடன் சந்திப்பு நடத்தினார்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தும் ஹமில்டன் வன்சிங்காவுடன் வடபகுதிவிஜயம் செய்தார்

இவவாலே, காரைநகர், நயினாதீவு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள படைத்தளபதிகளைச் சந்தித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. (சு)


## மெடி எயிட்ஸ் கிளினிக்

இல. 88. பருத்தித்துறை வீதி.
கல்வியங்காடு.

### ★ பற் சிகிச்சைப் பிரிவு ★

இன்று (16-9-92) பிற்பகல் 4-33 மணி தொடக்கம் 6-10 மணி வரை உள்ள சுப நேரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு, தினமும் பிற்பகல் 3-30 மணி தொடக்கம் 5-00 மணி வரை இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

Dr. வை. தியாகராசா
உரிமையாளர். (சி 6812)


## புதிய வீதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

மின்சாரநிலைய வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் புதிய பாதை பொதுமக்களின் பாவனைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளது.

பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வீதிக்கு 'புதிய ஸ்ரான்லி வீதி' என்று யாழ். மாநகரசபையினால் பெயரிடப்படவுள்ளது. (வி)

## அமைச்சர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரணிலின் சில நடவடிக்கைகள் குறித்தே இந்த விசேட சி. ஐ. டி பொலிஸார் விசாரணை நடாத்தவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து அமைச்சர் ரணிலிடம் வினவப்பட்ட போது அவர் இதனை ஓரளவு ஊர்ஜிதப்படுத்தியதாகவும், இந்த விசாரணை குறித்து சிங்களப்பத்திரிகைகள் பல செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)


## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

**உப பரிசோதகர் / காவலர் தரங்கள்**

தகைமைகள்: 8ம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.
உயரம்: 5' 6''.
வயது: 18 – 30 வரை.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 21-09-92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.
(எ 2443)


## இனப்பிரச்னையைத்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொடருகின்ற போரினால் இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டு வருவதையும் இந்த நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன

இக்காரணங்களினாலே இவ்வருட நடுப்பகுதியில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அந்நாடுகளினால் அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரி)

## ஜெயலலிதாவின்
# வெளிநாட்டுப் பயணம் ஒத்திவைக்கப்பட்டது

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணத்தை சிலகாலத்துக்கு ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் ஜெயலலிதாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென்ற அச்சம் காரணமாகவே மேற்படி வெளிநாட்டு சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு செல்ல இவர் திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## தென்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவித்துவருவதாகவும், சிங்கள மற்றும் முஸ்லிம் சிறைக் கைதிகளால் இவர்கள் தொடர்ச்சியாக துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் ஒவ்வொரு நிமிடத்தையும் பயத்துடனேயே கழிப்பதாகவும் கூறப்படுகிறது

மேலும் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக எவ்வித விசாரணையும் இன்றி இவர்கள் சிறையில் வாடுவதாகவும் இதுபற்றி மேன்முறையீடு செய்தால் அவையும் கவனிக்கப்படுவதில்லையெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## மட்டு.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்றடைவதில்லை எனதெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு அகதி முகாமில் உள்ள தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் எதுவும் தமிழகதிகளைச் சென்றடைவதில்லையெனவும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் தொண்டர் அமைப்புகள் பல மண்முனை உதவி அரசாங்க அதிபர்களை கேட்டுள்ளனது. (க)

## தியாகி திலீபன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரர் மயானத்தையும். சிறுவீதிகளையும் தும்பளை மேற்கு மக்கள் தும்பளை தெற்கு வீதிகளையும், புத்தூர் மக்கள் புத்தூர் மேற்கு கலைமதி வீதியையும், தீவக மக்கள் டயஸ் குடியிருப்பு பகுதிகளையும் துப்பரவு செய்வார்கள்.

இன்று, கரவெட்டி கம்புறு பகுதி மக்கள், கம்புறு சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் இணைந்து கால்வாய்களைத் திருத்தம் செய்கின்றார்கள் (வி)

## யாழ். குடாவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பித்து வைக்கப்பட்டன.

பொது இடங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், அரச, தனியார் அலுவலகங்கள், வீடுகள் ஆகிய இடங்களில் தியாகி திலீபனின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, மலர் தூவி, மலர் அணிவித்து. அஞ்சலி செலுத்தியதை நேற்று எங்கும் காணக்கூடியதாக இருந்தது வாகனங்களிலும், முக்கிய சந்திகளிலும் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள முக்கிய சந்திகள் மற்றும் வட்ட அவைகளை உள்ளடக்கிய பிரதேசங்களில் பெரியளவிலான அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் படம் வைக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இப்பகுதிகளில் திலீபனைப் பற்றிய கவிதைகளும், பாடல்களும் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

தொடர்ந்து 26ம் திகதி வரை தமிழீழமெங்கும் திலீபன் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ரி-56)

## அதிபர்களுக்கு வேதனம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

1-6-89 தொடக்கம் அதிபர் தரம் 1, 2, 3 பதவி உயர்வு பெற்றமையால் வேதனத்துடன் வழங்கப்பட்ட விசேட வாழ்க்கை படியாகிய ரூபா 300 வேதனத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

கழிக்கப்பட்ட இவ்விசேட படியாகிய ரூபா 300 ஐயும் அவர்களுக்கு திருப்பி வழங்குமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று இவ்வாறு மாதாந்தம் கழிக்கப்பட்ட 300ரூபா பதவிஉயர்வு பெற்றவர்களுக்கு திருப்பி வழங்குமாறு சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் கூறியுள்ளார்.

## புலிகளின்

[1ம்பக்கத் தொடர்ச்சி]

இத்தாக்குதல்கள் புலிகள் கிழக்கு மாகாணத்திலும் பலமான நிலையிலிருப்பதனை உறுதிப் படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கில் தமது தரை ஆதிக்கத்தை திறமைமிக்க தந்திரஉபாயங்கள் மூலம் புலிகள் நிரூபித்து வருகிறார்கள்

இப்பகுதியில் புலிகள் மேற்கொள்ளும் தந்திரோபாய தாக்குதல்கள் இராணுவ ஏடுகளில் இல்லையென்றும் இவைகள் புலிகளின் வெற்றிகரமான புதிய யுத்திகளுக்கு எடுத்துக்காட்டாக உள்ளன என்றும் இராணுவநிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். (ரி)

## பருத்தித்துறை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இத்தாக்குதலின் போது மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் ஒருவாறு தப்பியோடிவிட்ட போதிலும் ஒரு வள்ளத்தை நோக்கி வந்த கடற்படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு அவ்வள்ளத்திலிருந்த மூவரில் ஒருவரைப் பிடித்து தாக்கிவிட்டு பின்னர் விடுவித்தனர்.

இவர்களுடன் சென்ற மற்றைய இரு மீனவர்களும் கடற்படையினரைக் கண்டதும் கடலில் குதித்து கரை சேர்ந்தனர். இவர்களது வள்ளம் துப்பாக்கிச் சூட்டினால் சேதமடைந்துள்ளது. (150)

## நிவாரண

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திருச்சபைகளின் குருவானவர் உட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மக்களை அமைதிப்படுத்தி மக்களது விருப்பத்துக்கேற்ற வகையில் ஓர் மகஜரைத் தயாரித்து செயலக அதிகாரிகளூடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக ஒப்படைத்தனர்

இதேவேளை பூநகரிப்பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் நிவாரண வெட்டைக் கண்டித்து நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கில் திரண்டு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரின் செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இங்கும் மக்கள் மிகவும் உணர்ச்சிகரமாகவே காணப்பட்டனர் மகஜர் ஒன்றையும் உதவி அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். [ரி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி ... அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under license Number B/10336,